கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்

1கொரிந்தியர் 1:30

# ஞான ஒலி

## இணைய வார இதழ்

www.newwisdomministries.com



ஞானம் 5 - ஒலி 31 | 31-07-2022



# சத்தியமாக சத்தியம் விடுவிக்கும்...



## தலையங்கம்

# கடவுளுக்கே கடமைப்பட்டுள்ளோம்

அருட்பணி. **சைமன் பீட்டர்**

இணையில்லா நம் அருள்நாதர் இயேசு கிறிஸ்துவில் பிரியமான எனதருமை ஞான ஒலி இணைய இதழின் வாசகர்களே உங்கள் அனைவருக்கும் என் அன்பான வணக்கங்கள்.

உலகிலேயே மிகப் பெரிய வீரன் யாரென்றால் பொறுமைசாலிதான். பொறுமை என்ற நற்குணம், பலவீனர்களிடம் இருக்காது. அது ஞானிகளுக்கான பண்பு. கத்திக் கூச்சல் போடுபவர்கள், மிகமிகப் பலவீனமானவர்கள். அவர்கள் உண்மையிலேயே பயந்தாங்கொள்ளிகள். கூட்டத்தில் ஒருவர் சப்தமாக பேசுகின்றார் என்றால், அவர் பிறரச்சமும், தாழ்வு மனம் கொண்டவர் என அவரை அறியாமல் வெளிப்படுத்துகின்றார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்

அப்படிப்பட்டவர்கள் பொறுமைசாலிகளின் முன் கூனிக்குறுகி, இவர்களுக்குரிய வலிமை நம்மிடையே இல்லையே என்று உள்ளூரப் புழுங்கிச் சாவார்கள். அவர்களின் மனக்குழப்பமும், பலவீனமும் அதிகரித்துக் கொண்டேயிருக்கும். தனிமையில் எப்போதும் மனநிம்மதியற்றவர்களாக இருப்பார்கள்.

அப்படிப்பட்டவர்கள் மற்றவரை அடிமைப்படுத்தவும், அழிக்கவும், மட்டம் தட்டி, அகற்றவுமே முயன்று கொண்டேயிருப்பார்கள். மனநோயின் உச்சம் அவர்களை அவ்வாறு செய்யத் தூண்டும். அவர்களால் அந்தச் சிறையிலிருந்து வெளிவரமுடியாது. சத்தியத்தை வெறுப்பவர்கள் அகச்சிறையில் இருப்பதே அதற்கான பரிசு.

ஆனால் மனதையும், எண்ணங்களையும் பிரித்தறிந்து அவற்றை கையாளத் தெரிந்த ஞானிகளே பொறுமைசாலிகள். அவர்களின் முகத்தில் எப்போதும் ஒரு தெய்வீகக்களை ஒளிர்ந்து கொண்டேயிருக்கும். அவர்களிடமே அமைதி, சமாதானம், சந்தோஷம் குடிகொண்டிருக்கும். அது அவர்களின் பற்றற்ற நிலைக்குக் கிடைக்கும் பரிசு.

கௌதம புத்தர் அவர்கள் தான் பெற்ற அந்த ஞான நிலைக்கான வழிகளை அனைவருக்கும் போதித்து வந்தார், இன்றும் அவரின் நினைவுகளும், அனுபவங்களும் நமக்கு அந்த வழிகளை வெளிச்சமிட்டுக் காட்டிக் கொண்டேயிருக்கின்றது.

ஒருமுறை புத்தர் பெருமான், தனது முதல் சீடனும், தன் மாமன் மகனுமான ஆனந்தாவுடன் ஒரு வீதி வழியே சென்று கொண்டிருந்தார். அப்போது அவரைப் பிடிக்காத ஒருவர் அவர்கள் எதிரே வந்தார். திடீரென புத்தரின் முகத்தில் அவன் காறித் துப்பினான். அப்போது புத்தர் அவர்கள் தான் அணிந்திருந்த மேல் துண்டால், தனது முகத்தைத் துடைத்துவிட்டு, துப்பியவரைப் பார்த்து, ஐயா, வேறு ஏதாவது என்னிடம் சொல்ல விரும்புகிறீர்களா? என்று கேட்டார். ஆனால் ஆனந்தா அவனின் இந்தச் செயலைப் பார்த்துக் கோபப்பட்டார். அதைவிட



புத்தரின் பொறுமையைப் பார்த்து ஆச்சரியப்பட்டு, அவன் உங்கள் முகத்தில் காறிப் துப்பியிருக்கின்றான், நீங்கள் ஏன் இவ்வளவு பொறுமையாக இருக்கின்றீர்கள். உங்களுக்குக் கோபமே வரவில்லையா என்று கேட்டார்.

அதற்கு புத்தர் பெருமான், ஆனந்தாவைப் பார்த்து, இவர் என்னிடம் ஏதோ சொல்ல விரும்புகிறார், ஆனால், அதை தன் வார்த்தைகளால் சொல்ல அவருக்கு வலிமையில்லை, ஆகவேதான் அவர் இவ்வாறு செய்துவிட்டார். பாவம் அவர் என்ன செய்வார். என்று சொல்லிவிட்டு தன் வழியே நடந்து சென்றார்.

புத்தரின் முகத்தில் துப்பியவருக்கோ அவமானமும், வேதனையும், குழப்பமுமே மிஞ்சியது. அன்று இரவு முழுவதும் அவரால் தூங்க முடியவில்லை. அடுத்த நாள் அதிகாலையில் எழுந்து, முதல் வேலையாக, ஊரெல்லாம் அலைந்து திரிந்து புத்தர் பெருமானைக் கண்டுபிடித்து, தனது நேற்றையத் தவறுக்காக மன்னிப்பு வேண்டி அவரின் காலில் விழுந்து அழுதார், அப்போது புத்தர் பெருமான் ஆனந்தாவிடம் பார்த்தீரா, இன்றும் இந்த மனிதர், என்னிடம் ஏதோ சொல்ல விரும்புகிறார். அதை அவரால் தன் வார்த்தைகளில் சொல்ல முடியவில்லை, தெரியவில்லை, ஆதலால்தான் அவர் இவ்வாறு செய்கின்றார். உண்மையிலேயே அவர் மிகவும் பாவம், என்று சொல்லிவிட்டு புத்தர் அவர்கள் தன் வழியே சென்றார்.

இவ்வாறு புத்தர் பெருமானுக்கு தனது காலத்திலேயே எதிர்ப்புகளும், குழிபறிக்கும் செயல்களும் ஏராளமாக நடந்தன. அவற்றையெல்லாம் அவர் கடந்தே வந்தார். ஒருவருக்கு எதிர்ப்பு சிறிதாய் இருக்கும்போது, அது அவருக்கு பெரியதாய்த் தோன்றும், ஆனால் அதுவே எல்லா திசைகளிலிருந்தும் வந்தால், அவை அவருக்கு உலகமகா பக்குவத்தைத் தந்துவிடும் என்பதற்கு புத்தர் பெருமானே சான்று எனலாம்.

ஒருகாலத்தில் புத்தர் பெருமானின் அமர்ந்து தியானம் செய்வது போன்றச் சிலைகள் அனைத்து ஊர்களிலும் இருந்த அரச மரத்திடியில் நிறுவப்பட்டு வணக்கப்பட்டது என்பது வரலாறு. அந்த அளவிற்கு அவரின் போதனைகளுக்கு மதிப்பும், வரவேற்பும் இருந்தது. அதைவிட, அவரின் வளர்ச்சியைக் கண்டு பொறாமை கொண்டு அவரையும், அவரின் புகழையும், மார்க்கத்தையும் அழிக்க நினைத்தவர்கள் அதற்காக அல்லும், பகலும் செயல்பட்டார்கள்.

புத்தரின் மரணம்கூட மர்மம் நிறைந்ததாகவே இன்றுவரை இருக்கின்றது. அவர் சாப்பிட்ட பன்றிக்கறி நச்சு நிறைந்ததாக இருந்ததாகவும், அதனால்தான் அவர் இறந்ததாகவும் கூறப்பட்டது. ஆனால் அவரின் மரணம் மர்ம முடிச்சுகளால் நிறைந்திருக்கின்றது.

அரசமரத்தடி பிள்ளையார் என்று இன்றும் மக்கள் பக்தியோடு வழிபடுவதை நாம் காணுகின்றோம். பௌத்தத்தை அழிப்பதற்காக, அரசமரத்தடியில் இருந்த புத்தர் சிலைகளையெல்லாம் உடைத்து அகற்றிவிட்டு, அதற்குப் பதிலாக அங்கு பிள்ளையார் சிலைகள் நிறுவப்பட்டு இந்த பிள்ளையார் பக்தி மும்முரமாக வளர்த்தெடுக்கப்பட்டது என்தாகவும் கூறுகின்றார்கள்.

வரலாற்றில், இதுபோன்ற அழிப்புகள் பல மார்க்கத் தலைவர்களுக்கும் நடந்ததுள்ளது. இன்று இருக்கும் பல பக்தி மார்க்கங்களின் கடந்த கால வரலாறு, இரத்த வாடையும், எண்ணற்ற நரவேட்டைகளாலும் நிறைந்தது என்பதை மறுக்க முடியாது. அது சத்தியத்தைக் காத்ததற்காக என்று, ஒரு சப்பைக்கட்டு கட்டும் கட்டுக்கதைகளும் உண்டு.

ஒரு உண்மையை எவ்வளவு பேர், எத்தனை தடவை அழித்தாலும், அதை முற்றிலுமாக அழிக்க முடியாது. அழிக்கப்படுபவை உண்மையற்றதாக இருக்கும் பட்சத்தில், அது மீண்டும் தலைதூக்காது. ஆனால், அது சத்தியத்தின் மீது கட்டப்பட்ட மார்க்கமாக இருந்தால் அது அழியவே அழியாது.

சத்தியம் அனைத்தையும் மிகவும் பொறுமையாக சத்தித்தே நிமிர்ந்து நிற்கும். அதை அழிக்க நினைப்பவை அனைத்தும் அழிந்தே போகும்.

இயேசுவையும், அவரது மார்க்கத்தையும் அழிக்க நினைத்த யூதர்கள், இயேசுவைக் கொன்று மிகப்பெரிய தவறு செய்தார்கள்.

இன்றைய உலகம் பெரும்பாலும் இயேசுவின் சீடர்களால்தான் நிரம்பியுள்ளது. யூத மதம் இன்றும் சிறுத்துக் கொண்டேதான் செல்கிறது. அது வளர்ந்தது எப்படியென்றால், யூத மதத்தில் சேர விரும்புவர்கள் எல்லாரையும் சேர்த்துக் கொண்டதால்தான்.

இன்றளவும், இயேசு உயிர்தெழவில்லை என்ற கட்டுக்கதைகள் தமிழ்நாடுவரை ஒலிக்கின்றது அதனால் பாராளுமன்றத்திற்குள்ளும் புக அது வழி ஏற்படுத்திக் கொடுக்கின்றது. ஒருவகையில் இயேசுவின் நாமமே அவர்களுக்கு இப்படிப்பட்ட மேட்டிமையைத் தருகின்றது. இயேசுவின் பெயரால் தொழுநோயாளிகளுக்கு பணிசெய்த கிரஹாம் ஸ்டெயின்சும், அவரது இரண்டு பிள்ளைகளும் தீயிட்டுக் கொல்லப்பட்டபோது, அந்த ஊரின் கவுன்சிலராக இருந்த பெண்ணுக்கு இன்று மிக உயர்ந்த பதவி கொடுக்கபட்டுள்ளது என்ற செய்திகளின் அடிப்படையில், இயேசுவின் நாமம் இருக்கின்றதென்றால், இயேசு அனைவருக்கும் நன்மைகளையே செய்கின்றார்... மிக... மிக பொறுமையாக...

இயேசுவை அவரது எதிரிகள் கொன்றார்கள், அத்தோடு முடிந்தது என்று நினைத்தார்கள், ஆனால் இயேசுவின் சீடர்களின் வழியாக முக்கியமாக பேதுரு வழியாக இயேசுவின் அற்புதங்கள் தொடர்ந்தன, இயேசுவின் சீடர்களின் எண்ணிக்கை மிக வேகமாக வளர்ந்து கொண்டேயிருந்தது, ஆதலால் பேதுருவையும், திருத்தூதரையும் சிறையிலடைத்தார்கள், ஆனால், ஆண்டவரின் தூதர் அவர்களை விடுவித்து, நீங்கள போய்க் கோவிலில் நின்று வாழ்வு பற்றிய வார்த்தைகளையெல்லாம் மக்களுக்கு எடுத்துக் கூறுங்கள் என்றார் -திருத்தூதர் பணிகள்- 5:20

அதன்பிறகு, தலைமைக் குருவும், அவரைச் சேர்ந்தவர்களும் அனைத்து இஸ்ரயேல் மக்களின் ஆட்சிப் பேரவையாகிய தலைமைச் சங்கத்தைக் கூட்டித் ஆலயத்தில் போதித்துக் கொண்டிருந்த திருத்தூதர்களைக் காவலரைக் கொண்டு அழைத்து வந்து, நீங்கள் இயேசுவைப் பற்றிக் கற்பிக்கக் கூடாது என்று மீண்டும் கட்டளையிட்டார்கள். ஆனால் பேதுருவும் திருத்தூதரும் மறுமொழியாக மனிதர்களுக்குக் கீழ்படிவதைவிட கடவுளுக்கு அல்லவா கீழ்ப்படிய வேண்டும்? என்று சொன்னார்கள்... அப்போது தலைமைக் குருவும் மற்றவரும் கொதித்தெழுந்து திருத்தூதர்களைக் கொல்லத் திட்டமிட்டனர்...

அப்போது கமாலியேல் என்னும் பெயருடைய பரிசேயர் ஒருவர், தலைமைச் சங்கத்தில் எழுந்து...

இப்போது நீங்கள் இம் மனிதர்களை விட்டுவிடுங்கள் என நான் உங்களுக்குக் கூறுகிறேன். இவர்கள் காரியத்தில நீங்கள் தலையிட வேண்டாம். இவர்கள் திட்டமும் செயலும் மனிதரிடத்திலிருந்து வந்தவை என்றால் அவை ஒழிந்து போகும். அவை கடவுளைச் சார்ந்தவை என்றால் நீங்கள் அவற்றை ஒழிக்க முடியாது. நீங்கள் கடவுளோடு போரிடுபவர்களாகவும் ஆவீர்கள் என்றார். -திரு. பணி 5:22-41

அவர்கள் கூறியதைச் யூதச் சங்கத்தைச் சேர்ந்த சங்கிகள் எற்றுக் கொண்டனர். எத்தனை பணமும், பதவிகளும், சொத்துக்களும், வரிச் சலுகைகள் கொடுக்கப்பட்டாலும், இறைவழியை அழிக்க முடியாது.

சத்தியம் சாந்தமாகத்தான் இருக்கும். சத்தியம் சத்தம் எழுப்பாது. பொய் எப்போதும் சத்தியத்தைக் கண்டு பயப்படும், ஆகவேதான் அது சத்தியத்தை அழிக்க சதியில் ஈடுபடும். இருந்தாலும் அதன் அரிப்பு அடங்காது, அது சதா காலமும் சத்தியத்தை, தோற்றுத் தோற்று எதிர்த்துக் கொண்டேதான் இருக்கும்.

ஆனால் உண்மையை நேசிப்பவர்களுக்கு அது உண்மையாய் இருக்கும்.

உண்மையை அறிந்தவர்களாயும் இருப்பீர்கள், உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும் என்றார் இயேசு. - யோவான் 8:32

“ **Learning Patience**

Can be a difficult experience, but once conquered you will find life is easier.

- Catherine Pulsifer



# விவிலியம் அறிவோம் - 49

அருட்பணி. ஆ.அலெக்ஸ் CMF

## யோசேப்பு சகோதரர்களுக்குத் தன்னை வெளிப்படுத்துதல்

யேஸசேப்பின் சகோதரர்கள் இளையவனான பென்யமினுடன் இரண்டாவது தடவையாக தானியங்கள் வாங்குவதற்காக எகிப்திற்கு வருகின்றனர். அவர்களுக்குத் தெரியாமலேயே விருந்து ஒன்றிற்கு ஏற்பாடு செய்கின்றார் யோசேப்பு. வீட்டு மேற்பார்வையாளர் சகோதரர்களை யோசேப்பின் வீட்டிற்கு அழைத்து வருகின்றார். அனைவரும் யோசேப்பின் வருகைக்காகக் காத்திருக்கின்றனர். யோசேப்பு வருகிறார். அவரைக் கண்டதும் சகோதரர்கள் அனைவரும் முன்புபோல தரைமட்டும் தாழ்ந்து வணங்குகின்றனர். அவர்கள் கொண்டுவந்த பரிசுப் பொருள்களையும் யோசேப்பிற்கு முன் வைக்கின்றனர். இங்கே யோசேப்பின் கனவுகள் நமது நினைவுக்கு வருவதை தவிர்க்கமுடியாது. யோசேப்பு தனது தந்தையின் நலம்பற்றி விசாரிக்கிறார். அதன்பின் பென்யமினைப் பார்க்கிறார். நீங்கள் என்னிடம் கூறிய உங்கள் இளைய சகோதரன் இவன்தானா? எனக் கேட்கிறார். பென்யமினின் பிரசன்னத்தை அவர் ஏற்கிறார்; ஆனால் தான் யார் என்பதை அவர் இன்னும் வெளிப்படுத்தவில்லை. ஏனைய சகோதரர்களுடன் பென்யமினையும் கண்டதால் அவரால் உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. தனது அறைக்குச் சென்று அழுகின்றார். பின்பு தன் முகத்தைக் கழுவியபின் அவர்கள் இருந்த அறைக்கு வருகின்றார்.

விருந்து உண்பதற்காக அனைவரும் அமர்கின்றனர். யோசேப்பு தனியாக அமர்கிறார். யாக்கோபின் புதல்வர்கள் அவர்களின் வயதுக்கேற்றவாறு மூத்தவன் தொடங்கி இளையவன் வரை வரிசையாக அமர்த்தப்படுகின்றனர். அவர்களுக்குப் பணிவிடை செய்வதற்காக வந்த எகிப்தியர்கள் தனியாக அமர்கின்றனர். உணவு உண்ணும்போது உட்காருவதற்கும் சில வழிமுறைகள் இருந்தன. பொதுவாக எகிப்தியர்கள் பிற இனத்தவர்களுடன் அமர்ந்து உண்பதில்லை. ஏனெனில் அவர்களைக் காட்டுமிராண்டிகள், தீட்டானவர்கள் எனக் கருதினர். யோசேப்பு எகிப்து நாட்டின் உயர் அதிகாரியாக இருந்ததால் அவர் தனியாக இருந்து உணவருந்துவது முறையாக இருந்தது. அனைவருக்கும் விருந்து பரிமாறப்படுகிறது. யோசேப்பின் முன் வைக்கப்பட்ட தட்டுகளிலிருந்து அவர்களுக்குப் பரிமாறப்படுகிறது. யாக்கோபின் புதல்வர்கள் விருந்தோம்புதல் குறித்து ஆச்சரியப் படுகின்றனர். மற்றவர்களது பங்கைப்போல் ஐந்து மடங்கு மிகுதியாகப் பென்யமினுக்கு பரிமாறப்படுகிறது.. ஏன் அவனுக்கு அவ்வாறு பரிமாறப்பட்டது என்பதற்கான காரணங்கள் கொடுக்கப்படவில்லை. ஒருவேளை தனது தாயின் வயிற்றில் பிறந்தவனான பென்யமினைக் கண்டதால் யோசேப்பு மிகுந்த மகிழ்ச்சிக்குள்ளாகியிருக்கலாம். அதனால் அவனைத் தனிப்பட்ட முறையில் கவனித்திருக்கலாம். அல்லது யோசேப்பு சிறுவனாக இருந்தபோது அவனது சகோதரர்கள் தன்மீது பொறாமை கொண்டவர்களாக இருந்ததுபோல பென்யமின் மீதும் பொறாமை கொண்டவர்களாக இருக்கிறார்களா? என்பதைச் சோதித்துப் பார்ப்பதற்காகச் செய்திருக்கலாம். அதற்கான நோக்கம் பதிவு செய்யப் படவில்லை.

யோசேப்பு யார் என்பது இன்னும் வெளிப்படுத்தப் படவில்லை.

விருந்து முடிந்தபின் யோசேப்பு அவரது வீட்டு மேற்பார்வையாளரிடம் அனைவரது கோணிப்பைகளையும் தானியங்களால் நிரப்பவும், அவரவர் பணத்தை பையின் வாயில் வைத்துக் கட்டிவிடவும் பணிக்கின்றார். இளையவனான பென்யமினின் கோணிப்பையில் மட்டும் யோசேப்பின் வெள்ளிக்கிண்ணத்தையும், அவனது பணத்தையும் வைத்துக் கட்டுவதற்குக் கட்டளையிடுகின்றார். வீட்டு மேற்பார்வையாளர்யோசேப்பின்; கட்டளைப்படி அனைத்தையும் செய்கின்றார். பென்யமினின் கோணிப்பையில் யோசேப்பின் வெள்ளிக்கோப்பை ஏன் வைக்கப்படுகிறது என்ற கேள்வி எழலாம். அதற்கான காரணம் கொடுக்கப்படவில்லை. யாக்கோபின் புதல்வர்கள் தானியங்களுடன் தங்கள் நாட்டிற்குப் புறப்படுகிறார்கள். அவர்கள் புறப்பட்டு சிறிது நேரம் சென்றவுடன் யோசேப்பு தனது வீட்டு மேற்பார்வையாளரை அனுப்பி நன்மைகள் செய்த தனது தலைவனுக்கு அவர்கள் தீமைகள் செய்ததாகக் குற்றம் சாட்டி அவர்களைத் திருப்பி அழைத்துவரச் செய்கிறார். வீட்டு மேற்பார்வையாளர் யோசேப்பின் கிண்ணத்தை அவர்கள் திருடிவிட்டதாகக் கூறவில்லை. மாறாக எதிர்மறையாக தனது தலைவனுக்குத் தீமை செய்துவிட்டதாகக் கூறுகிறார். நன்மைக்குக் கைமாறாக நீங்கள் தீமை செய்வது ஏன்?இது என் தலைவர் பருகப் பயன்படுத்துவது அல்லவா? இது அவர் குறிபார்க்கப் பயன்படுத்துவது அல்லவா? நீங்கள் செய்தது மிகப்பெரும் மோசடி! என அவர்கள் மீது குற்றம் சுமத்துகின்றார். பென்யமினின் கோணிப் பையில் வைக்கப்பட்ட வெள்ளிக் கிண்ண எனக் கூறப்படுகிறது. பண்டைய காலத்தில் குறிபார்ப்பதற்கு பலவிதமான பொருள்கள் பயன்படுத்தப்பட்டன. உதாரணமாக. இலைகளில் எண்ணெய் விட்டு அது பரவும் விதத்தைப் பார்த்து குறிசொல்லுதல், கிண்ணங்களில் திரவப் பொருள்களைப் பயன்படுத்தி குறிபார்த்தல், தண்ணீர் நிறைந்த ஒரு கிண்ணத்தில் எண்ணெய் ஊற்றி. அந்த எண்ணெய் தண்ணீரில் பரவும் விதத்தை அடிப்படையாகக் கொண்டு குறிசொல்லுதல், பலியிடப்பட்ட விலங்குகளின் ஈரலின் அமைப்பு, கிரகங்களின் இயக்கம் போன்றவை குறிசொல்வதற்குப் பயன்படுத்தப்பட்டன.




என்ன நடக்கிறது என்பதை யு+தாவின் புதல்வர்களால் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர்கள் கலக்க மடைகின்றனர். அவர்களின் பிரதிநிதியாக யூதா வீட்டு மேற்பார்வையாளரிடம் பேசுகிறார். அவர்கள் குற்றமற்றவர்கள் எனக் கூறுகிறார். அதற்கு ஆதாரமாக, முதல் தடவை தானியங்கள் வாங்க வந்தபோது பைகளில் வைக்கப்பட்டிருந்த பணத்தைத் திரும்பவும் கொண்டுவந்து கொடுத்ததைக் கூறுகின்றார். தங்களுள் யாராவது தவறு செய்திருந்தால் அவன் கொல்லப்படட்டும்; மற்றவர்கள் அனைவரும் அடிமைகளாய் இருப்போம் என வாக்குறுதி கொடுக்கிறார். யூதா இவ்வாறு வாக்குறுதி கொடுப்பதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். தனது சகோதரர்கள் அனைவரும் குற்றமற்றவர்கள் என அவர் உறுதியாக நம்புகிறார். முதல் பயணத்தின்போது தங்கள் கோணிப்பைகளில் வைக்கப்பட்டிருந்த பணத்தை அவர்கள் திரும்ப கொண்டுவந்து கொடுத்தது அவர்களின் குற்றமற்ற தன்மையை வெளிப்படுத்துவதாகக் கருதுகிறார். மேலும் இந்தப் பிரச்சினையை விரைவில் முடிக்கவேண்டும் என்ற விருப்பமும் இருப்பதாகத் தெரிகிறது. யூதாவின் கூற்றுக்கு வீட்டு மேற்பார்வையாளர் உடன்படுகிறார்; எல்லோரும் அடிமைகளாக இருப்பதற்கு அவர்

உடன்படவில்லை. மாறாக தவறு செய்தவன் மட்டுமே தண்டிக்கப்படுவான்; மற்றவர்கள் விடுவிக்கப்படுவார்கள் எனக் கூறுகின்றார். ஒவ்வொருவரின் கோணிப்பைகளும் திறந்து சோதனை யிடப்படுகின்றன. மூத்தவர்களின் கோணிப்பைகளில் களவுபோனதாகக் கூறப்பட்ட வெள்ளிக்கிண்ணம் இல்லை. இதனால் அவர்களின் மனதில் நம்பிக்கை பிறக்கிறது. ஆனால் வாசகர்களாகிய நமக்கு பென்யமினின் கோணிப்பையில் அந்த வெள்ளிக்கிண்ணம் உள்ளது தெரியும். எனவே மூத்தவர்களின் பைகளில் வெள்ளிக்கிண்ணம் கண்டுபிடிக்கப்படாததில் எந்த வியப்புமில்லை. கோணிப்பைகளை சோதனையிடுபவர்கள் பென்யமினை நெருங்க நெருங்க எதிர்பார்ப்பு மேலோங்குகிறது. பென்யமினின் கோணிப்பையில் யோசேப்பின் வெள்ளிக்கிண்ணம் கண்டுபிடிக்கப்படுகிறது.

சகோதரர்களால் எதுவும் பேச முடியவில்லை. அவர்கள் தங்கள் ஆடைகளைக் கிழித்துக்கொள்கின்றனர். மீண்டும் அவர்கள் யோசேப்பின் வீட்டிற்குக் கூட்டிவரப்படுகின்றனர். யோசேப்பின் வீட்டை அடைந்ததும் மீண்டும் அவருக்குமுன் தரையில் வீழ்ந்து வணங்குகின்றனர். அவர்களின் நாட்டிற்குத் திரும்பிச் செல்வோம் என்ற நம்பிக்கை அவர்களிடம் இப்போது இல்லை. யோசேப்பு அவர்களிடம் கடுமையாகப் பேசுகிறார். தன்னுடைய குறிபார்க்கும் ஆற்றலால் அவர்களின் தவற்றைக் கண்டுபிடித்ததாகக் கூறுகிறார். சகோதரர்கள் சார்பில் யூதா முன்வந்து பேசுகிறார். தங்கள் மீது வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளிலிருந்து தங்களை விடுவிக்கவோ, தங்களது மாசின்மையை







நிரூபிக்கவோ வழியில்லை என்பதைக் கூறுகிறார். எனவே யாரிடத்தில் வெள்ளிக்கிண்ணம் கண்டெடுக்கப்பட்டதோ அவனும் மற்றவர் அனைவரும் தங்களுக்கு அடிமைகளாக இருப்போம் எனக் கூறுகிறார். யோசேப்பு அதை ஏற்கவில்லை. கோப்பை யாரிடம் அகப்பட்டதோ அவன்மட்டும் அகதியாய் இருப்பான்; மற்றவர் உங்கள் தந்தையிடம் செல்லலாம் என்கிறார். யூதா மீண்டும் அவர்களின் கதையைக் கூறுகிறார். அவர்கள் முதல் தடவை எகிப்திற்கு வந்ததிலிருந்து நடந்தவை அனைத்தையும் கூறுகிறார். தந்தையின் துயரங்களை வெளிப்படுத்துகிறார். பென்யமின் அவர்களுடன் திரும்பாவிட்டால் தங்கள் தந்தை இறந்துவிடுவார் எனத் தெரிவிக்கிறார்.பென்யமினுக்கு ஏதாவது ஏற்பட்டால் அந்தப் பழியைத் தான் ஏற்றுக்கொள்வதாக தனது தந்தைக்கு அவர் கொடுத்த வாக்குறுதியை தெரிவிக்கிறார். பென்யமினுக்குப் பதிலாக என்னை உமக்கு அடிமையாக்கியருளும். இளைஞனை அவர்கள் சகோதரர்களுடன் போகவிடும் என்கிறார். யோசேப்பு அடிமையாக விற்கப்படுவதற்கு காரணமாக இருந்தவர் யூதா; அதனால் தந்தைக்குத் துயரைக் கொண்டுவந்தவர். இப்போது பென்யமினுக்குப் பதிலாக நானே அடிமையாக இருக்கிறேன் என்கிறார். தந்தைக்கு மீண்டும் துயரை ஏற்படுத்த அவர் விரும்பவில்லை.

யூதாவின் வார்த்தைகள் யோசேப்பைத் தொடுகின்றன. அவரது மனதை இளகச்செய்கின்றன. யோசேப்பு தன்னை தனது சகோதரர்களுக்கு வெளிப்படுத்த விரும்புகிறார். சகோதரர்களைத் தவிர

அங்கிருந்த அனைவரையும் வெளியே அனுப்புகிறார். அதன்பின் அவரது சகோதரர்களுக்கு தான் யார் என்பதை வெளிப்படுத்துகிறார். நான்தான் யோசேப்பு என வெளிப்படையாகக் கூறுகிறார். தந்தையைப் பற்றி அவர்களிடம் நலம் விசாரிக்கிறார். உண்மையை உணர்ந்த சகோதரர்களால் எதுவும் பேசமுடியவில்லை. அவர்கள் திகலடைந்தவர்களாக, பதில் சொல்ல முடியாமல் நிற்கிறார்கள். யோசேப்பு மீண்டும், நீங்கள் எகிப்திற்குச் செல்லுமாறு விற்ற உங்கள் சகோதரனாகிய யோசேப்பு நான்தான்! என அழுத்தமாகக் கூறுகிறார். யோசேப்பின் வார்த்தைகள் அவர்களின் உறவை வெளிப்படுத்துவது மட்டுமல்லாமல் சகோதரர்களின் முந்தைய இறுக்கமான உறவுநிலையையும் சுட்டிக்காட்டுகிறது. யோசேப்பு அவர்களுக்கு ஆறுதல் கூறுகிறார். அவர்களின் செயல் தவறானதாக இருந்தாலும் அது கடவுளின் செயல் என்கிறார். உயிர்களைக் காக்கும்பொருட்டே கடவுள் உங்களுக்கு முன்னே என்னை எகிப்திற்கு அனுப்பியருளினார் எனக் கூறுகிறார். அவர் எகிப்திற்கு ஆளுனராக நியமிக்கப்பட்டதும் கடவுளின் செயலே என்கிறார். யோசேப்பின் இந்தப் பார்வை மிகவும் போற்றுதலுக்குரியதாக உள்ளது.

யேஸசேப்ப தனது சகோதரர்கள் தந்தையிடம் சென்று, அவரையும் எகிப்திற்கு அழைத்துவரக் கட்டளையிடுகிறார். நீங்களும் உங்கள் பிள்ளைகளும் உங்கள் பிள்ளைகளின் பிள்ளைகளும் உங்கள் ஆடு மாடுகளோடும் உங்களுக்குச் சொந்தமான யாவற்றோடும் கோசேன் பகுதியில் எனக்கு அருகில் குடியேறி வாழலாம்.அங்குள்ள உங்களை நான் பேணிக் காப்பேன். ஏனெனில் இன்னும் ஐந்தாண்டுகள் பஞ்சம் இருக்கும். இங்கு வராவிடில், நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் உங்களுக்குள்ள அனைத்தும் வறியோராய் வாடுவீர்கள் என்கிறார். அதன்பின் முதலில் பென்யமினையும், பிறகு ஒவ்வொரு சகோதரரையும் முத்தமிட்டு அழுகிறார்; அவர்களோடு உரையாடுகிறார். யோசேப்பின் சகோதரர்கள் எகிப்திற்கு வந்திருக்கும் செய்தி பார்வோனை எட்டுகிறது. அவரும் மகிழ்ச்சியடைகிறார். யோசேப்பின் சகோதரர்களுக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார். யோசேப்பு கூறியதைப்போல பார்வோனும், யோசேப்பின் சகோதரர்கள் தங்கள் மனைவி, பிள்ளைகளுடனும், கால்நடைகளுடனும், தந்தையையும் அழைத்துக்கொண்டு எகிப்திற்கு வந்து தங்க அழைப்புவிடுக்கிறார். அவர்கள் எகிப்து வந்துசேருவதற்கு தேவையான அனைத்தையும் கொடுப்பதற்குப் பணிக்கிறார். யோசேப்பு தனது சகோதரர்களின் பயணத்திற்குத் தேவையான அனைத்தையும் கொடுத்து அவர்களை அனுப்பிவைக்கிறார். அவர்களுக்குப் பரிசுகளும் அளிக்கிறார். பென்யமினுக்கு மிகுதியாகத் தருகிறார். சகோதரர்கள் கானானுக்குத் திரும்பிவந்து தந்தையிடம் அனைத்தையும் கூறுகிறார்கள். யோசேப்பு எகிப்துநாடு முழுவதற்கும் ஆளுனராக இருப்பதைத் தெரிவிக்கிறார்கள். யாக்கோபு முதலில் நம்புவதற்குத் தயங்கினாலும் யோசேப்பு அவர்களின் பயணத்திற்காக அனுப்பியிருந்தவற்றைப் பார்க்கும்போது அவர்களின் பேச்சை நம்புகிறார். எகிப்திற்குச் சென்று யோசேப்பைக் காண்பதற்கு உறுதிகொள்கிறார்.




பயணம் தொடரும்,

அருட்பணி. **ஆ. அலெக்ஸ்** CMF



# ஞாயிறு மறையுரை

## பொதுக்காலம் 18–ம் ஞாயிறு

31–07–2022

சபை உரையாளர் 1:2,2:21–23
கொலோசையர் 3:1–5, 8–11
லூக்கா 12:13–21


அருட்பணி. **ஜெரால்டின் ஜோசப்**
உதவிப்பங்குத்தந்தை
புனித அந்தோணியார் திருத்தலம்
புலியகுளம்,கோவை




இறைமகன் இயேசுவில் பிரியமுள்ள எனதன்பு சகோதரிகளே சகேதரர்களே உங்கள் அனைவருக்கும் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினனுடைய அற்புத நாமத்திலே வாழ்த்துக்களையும், வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இன்றைய நற்செய்தி வாசகமானது இரண்டு காரியங்களை நமக்கு எடுத்துச் சொல்கிறது. ஏன் இயேசுவிடம் அந்த மனிதர் தன்னுடைய சச்சரவுகளை, பிரச்னைகளை கொண்டுவந்தார் என்று பார்க்கின்றபோது அன்றைய காலக்கட்டங்களிலே யூதர்களிடையே இருந்த சச்சரவுகள், சண்டைகள் யாரெல்லாம் தீர்க்கமுடியவில்லையோ, அந்தத் தீர்க்கமுடியாத சச்சரவுகளை மரியாதைக்குரிய ரபிகளிடம் கொண்டுவருவார்கள்.

ஆகவேதான் இயேசுவை அவர் மரியாதைக்குரிய ரபியாக ஏற்றுக்கொண்டார், அவரிடம் தன் சச்சரவுனகளைக் கொண்டுவருகிறார். என் சகோதரரிடம் எனக்காகப் பரிந்து பேசும், என்னோடு சொத்தைப் பகிர்ந்து கொள்ளச் சொல்லும் என்று சொல்லி அவர் கேட்கிறார். ஆகவேதான் அவர் மரியாதைக்குரிய ரபியாக இருக்கிறார் என்பதை அவர் ஏற்றுக் கொண்டார். இயேசு இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு தன்னுடைய சீடர்களுக்கு ஒரு செயலைச் செய்து காட்ட விரும்புகிறார். தன்னுடையப் போதனையைக் கொடுக்க விரும்புகிறார்.

ஆகவேதான் அந்த எடுத்துக்காட்டான சில வார்த்தைகளைச் சொல்லி அவர் இந்த உவமையைக் கொண்டு விளக்குகிறார். இங்கே இயேசுவைப் பற்றிப் பார்க்கிறபொழுது அவர் இந்த சொத்து காசு இவைகளைப்பற்றிய சச்சரவுகளில் தன்னை கலந்துகொள்ள மறுக்கிறார். காரணம் இந்த உலக வாழ்க்கைக்கு எது தேவையோ, அவைகளை அவர் விட்டுவிடுகிறார். ஆனால் மறு உலக வாழ்க்கைக்குத் தேவையானதைக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்பதற்காகவே தம் சீடர்களுக்கு வேறு இரண்டு விஷயங்களைக் கற்றுக் கொடுக்கின்றார். முதலாவது அந்தப் பணக்கார அறிவிலி செய்த தவறும், அவற்றுக்குரிய தண்டனைகளும் என்ன என்பதை அவர் சுட்டிக் காட்டுகிறார். அதிலே முதலாவது என்ன என்று பார்க்கின்ற பொழுது தன்னைத் தாண்டி அவர் பார்க்கவில்லை. அப்படிப் பார்க்கின்ற பொழுது, நான், என்னை, எனக்கு, என்னுடையது என்கின்ற இந்த வார்த்தைகளையெல்லாம் பார்க்கின்ற பொழுது இது முரட்டுத்தனமான வார்த்தைகளாக இருக்கின்றது, இவ்வாறு சொல்கின்றபொழுது உதடுகள் ஒட்டாது, ஆனால் நாம், நமது, நமக்கு என்று சொல்கின்றபொழுது உதடுகள் ஒட்டும் என்று நாம் பார்க்கின்றோம்.

ஆகவேதான் இந்த முரட்டுத்தனமான இந்த வார்த்தைகளை அந்தப் பணக்கார வாலிபர் கொண்டிருந்தார். ஆகவேதான் அதை அவர் சாடுகிறவிதமாக இதைச் சொல்லுகிறார். ஏன் என்று சொல்லிப் பார்க்கின்றபொழுது பேராசையானது பிரித்தெடுக்க விரும்புகிறது. ஆனால் அன்பு ஒன்று சேர்க்கின்றது. ஒன்றுகூட்டுகிறது. வாழ்விக்கின்றது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. கொடுப்பதில் அவர் இன்பம் காணவில்லை. மாறாக சேர்த்து வைப்பதில் இன்னும் அதிகமாக சேர்த்து வைப்பதிலும் பல்லாண்டுகளுக்கு எனக்குத் தேவையானது இருக்கிறது, ஆகவே உண்டு குடித்து மகிழ்ந்திரு என்று சொல்வதில்தான் அவரின் சந்தோஷம் அடங்கியிருந்தது.


ஆகவேதான் இயேசு அதை எதிர்க்கின்ற விதமாக இந்த வார்த்தைகளைச் சொல்லுகிறார். ஏன் என்று பார்க்கின்றபொழுது என்னுடைய சொத்துக்களைப் பகிர்ந்து கொள்ளச் சொல்லும் என்றுதான் அந்தப் பணக்காரன் கேட்கிறான். மாறாக என் சகோதரன் எடுத்துக் கொள்ளட்டும் என்று சொல்லவில்லை. ஆகவேதான் அவர் தன்னைத்தாண்டி எதையும் யோசிக்கவில்லை என்று இயேசு இங்கே சுட்டிக் காட்டுகின்றார். உரோமையர்களிடம் இப்படியொரு வழக்கம் இருந்தது. பேச்சு வழக்கில் இதை அவர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். பணம் கடல்நீர்ப் போன்றது. எவ்வளவு அதிகம் குடிக்கின்றோமோ அவ்வளவு அதிக தாகம் எடுக்கும் என்று. கடல் நீரை நாம் குடித்தோம் என்று சொன்னால், வேறு தண்ணீரைக் குடித்து அந்த உப்புத் தண்ணீரை நாம் கழுவிவிடவேண்டும், நம்மைச் சுத்தம் செய்ய வேண்டும். அதேபோன்றுதான் இந்தப் பணத்தினுடைய மதிப்பும். எந்த அளவுக்கு நாம் சேர்க்கின்றோமோ, இன்னும் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதைத்தான் நமது மனமானது நாடிச் செல்லும் என்று சொல்லுகிறார். சகோதரனை அன்பு செய்வதைவிட அந்த மனிதர் அந்த சொத்தை அன்பு செய்தார். எது முக்கியம் என்பதை இயேசு இங்கே சுட்டிக் காட்டுகின்றார். சதோதர அன்பு முக்கியமே தவிர சொத்து முக்கியம் அல்ல, பேராசை முக்கியம் அல்ல. அன்புதான் முக்கியம் என்பதை இங்கே சுட்டிக் காட்டுகின்றார்.


இரண்டாவதாக, அவர் இந்த உலகத்தைத் தாண்டி பார்க்கவில்லை என்றுதான் சொல்லவேண்டும். இந்த உலக வாழ்க்கையிலே தனக்கு என்ன தேவை எப்படி சேர்த்து வைப்பது என்பதைப் பார்க்கிறார். என்னுடைய களஞ்சியத்தில் இடமில்லை, ஆனால் அதை இடித்து பெரிதாகக் கட்டுவேன், என் சொத்துக்களைச் சேர்த்து வைப்பேன். என் நெஞ்சே நீ உண்டு குடித்து இளைப்பாறு என்று சொன்னால், பல ஆண்டுகளுக்குத் தேவையானவை உனக்கு இருக்கிறது என்றான். இந்த உலக வாழ்க்கையைத் தாண்டிப் பார்க்கவில்லை, மறுவுலக வாழ்க்கைக்கு என்ன சொத்து இருக்கிறது, அதை நான் எங்கே, எங்கே சேர்த்து வைக்க வேண்டும் என்பதை அவர் மறந்துபோனார். இந்த உலக வாழ்க்கையிலே அதிகமாகக் கிடைக்கிற பொழுது, இந்த அதிகத்தையாவது பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றுதான் இயேசு ஆசைப்படுகிறார். இருப்பவர் கொடுப்பதில் இன்பம் என்ன, கையில் இருப்பதைக் கொடுப்பதே இன்பம் என்று சொல்லி நாம் பார்க்கின்றோம். ஆகவேதான் அவர் கையில் இருப்பதை இன்னும் அதிகம் அதிகம் சேர்த்து வைக்காமல், அதைக் கொடுக்க முயற்சி செய்யவேண்டும் என்று சொல்லுகின்றார். ஆகவே இந்த உலகத்தைத் தாண்டி அவர் பார்க்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஆக இந்த இரண்டு வகைகளிலே நாம் எதைக் குறித்தவர்களாய் இருக்கிறோம் என்று சிந்தித்துப் பார்ப்போம். நம்முடைய சகோதர சகோதரிகளை அன்பு செய்கிறோமா? அல்லது சொத்துப் பத்துக்களை அன்பு செய்கிறோமா? பேராசைப் படுகிறோமா? அன்பை வைத்து ஒன்று சேர்த்து வாழ்கிறோம் என்று சிந்தித்துப் பார்க்க இயேசு அழைப்பு விடுக்கிறார். ஆகவே இயேசு மரியாதைக்குரிய ரபியாக இருக்கிறார் என்று உணர்ந்தவர்களாக நாம் அந்த மரியாதைக்குரிய ரபியிடம் வருவோம். அவர் நம்மை ஆசீர்வதித்து வழிநடத்துவாராக.

– ஆமென்

I tell you the truth, it is hard for
a rich man to enter the
**Kingdom of Heaven.**
Again I tell you, it is easier
for a camel to go through the eye of a
needle than for a rich man to
enter the **Kingdom of Heaven.**

**- Jesus Christ**






# பொதுக்காலத்தின் 18-ம் ஞாயிறு

ச.உ. 1:2, 2:21-23, கொலோ. 3:1-5, 9-11, லூக். 12:13-21

**31-07-2022**



**பா. சேவியர்**
பட்டாபிராம், சென்னை.

## திருப்பலி முன்னுரை

பழைய மனித இயல்பாம் சுயநலத்தை களைந்துவிட்டு, கடவுளின் சாயலுக்கேற்ற புதிய இயல்பாம் பிறர் நலனில் அக்கறை கொண்டவர்களாய் மேலுலகைச் சார்ந்தவற்றை நாடுபவர்களாய் வாழ வரம் வேண்டி வருகை தந்துள்ள அன்பு இறைமக்களே, உங்கள் அனைவரையும் பொதுக் காலத்தின் 18-ஆம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

எவ்வகைப் பேராசைக்கும் இடம் கொடாதவராய் வாழ இன்றைய வழிபாடு நம்மை அழைக்கிறது. எப்படியாவது பணம் சேர்க்க வேண்டும் என்ற பேராசை கொண்டோருக்கு இன்றைய நற்செய்தி நல்ல படிப்பினையாக அமைகிறது.

மகிழ்ச்சியான, நிம்மதியான, நிறைவான வாழ்வு எங்கிருந்து வருகிறது? கடவுள் முன்னிலையில் செல்வம் என்பது என்ன? என்ற கேள்விகளை முன்னெழுப்பி நம்மை சிந்திக்க அழைக்கிறது இன்றைய வார்த்தை வழிபாடு.

மனிதன் நினைப்பதுண்டு வாழ்வு நிலைக்குமென்று, இறைவன் நினைப்பதுண்டு பாவம் மனிதனென்று என்ற தத்துவத்தை மையமாகக் கொண்ட, இன்றைய வழிபாடு இவ்வுலகில் நிலையாமை ஒன்றே நிலையானது என்பதை வலியுறுத்துகிறது.

மனிதன் பிறக்கும்போது எதையும் கொண்டு வருவதில்லை, இறந்த பிறகு எதையும் கொண்டு செல்வதில்லை, வாழும்போது மனிதன் இதை புரிந்து கொள்வதில்லை. உறவுகள் நிறைந்த வாழ்வுதான் இறைவன் முன்னிலையில் செல்வம். இறை உறவும் மனித உறவுகளும்தான் மனித வாழ்வை வளமாக்குகின்றன என்பதை இன்றைய வழிபாடு நமக்கு உணர்த்துகிறது.

கிறிஸ்தவர்களாகிய நாம் விண்ணக வாழ்வை கண்முன் வைத்தவர்களாய், மண்ணாசை, பொன்னாசை பொருளாசையைக் கடந்தவர்களாய், இறைவனையே நம் செல்வமாகக் கொண்டு, இருப்பதைப் பகிர்ந்து பிறர் நலம் பேணுபவர்களாய், நல்வாழ்வு வாழ்ந்திட வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

ஒன்றுமில்லாமைக்காக ஆசைப்பட்டு கடவுள் கொடுத்த மனிதப் பிறவியை வீணடிக்க வேண்டாம் என்பதை வலியுறுத்துகிறது இன்றைய முதல் வாசகம். கடினமாய் உழைத்துச் சேர்த்தச் சொத்துகள் அதற்காக உழைக்காதவரிடம் செல்வது பெரிய அநீதி. எல்லாம் வீண் என்பதை விளக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

இவ்வுலகை சார்ந்ததைப் பற்றி அல்லாமல் மேல்உலகை சார்ந்தவை பற்றி எண்ணி அவற்றையே நாடவும், பழைய மனித இயல்புகளைக் களைந்துவிட்டு, புதிய மனித இயல்பை அணிந்தவர்களாய் வாழவும் அழைக்கிறது இன்றைய இரண்டாம் வாசகம். கிறிஸ்துவின் உயிர்ப்பு நம் வாழ்வுக்கு ஓர் அடிப்படை மட்டுமன்று. ஒரு சவாலுமாய் அமைகிறது என்பதை எடுத்துரைக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) அமைதியும் ஆறுதலும் கொடுக்க வல்ல அன்பு இறைவா, இயேசுக் கிறிஸ்துவைப் பின்பற்றி வாழவும், மனமாற்றம் பெற்று கிறிஸ்துவில் புது வாழ்வு பெறவும், கிறிஸ்துவின் இயல்பை அணிந்தவர்களாய் நீதியிலும் தூய்மையிலும் வாழும்படி உலக மாந்தரை நெறிப்படுத்தி வழி நடத்தும் உம் திரு அவையின் தலைவர்களை நிறைவாக ஆசீர்வதியும். அவர்களுக்கு நல்ல உடல் நலத்தையும், ஆன்ம பலத்தையும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) அன்பு இறைவா, நாங்கள் மனித இயல்புகளை உள்வாங்கியவர்களாய் எளிமை – தாழ்ச்சி – பிறரன்பு போன்ற பண்பு நலன்களைக் கொண்டவர்களாய், எமக்கு அடுத்து இருப்பவரோடு இணக்கமாய் பழகி நல்லுறுவை வளர்ப்பவர்களாய், எந்த உயிர்க்கும் பாதகம் இல்லாத அன்புச் செயல்களை செய்பவர்களாய், இல்லாதவர்களை, இயலாதவர்களைத் தேடிச் சென்று அவர்களுக்கு இயன்ற உதவிகளைச் செய்பவராய் வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3) எல்லா உயிரினங்களின் விருப்பத்தையும் நிறைவேற்றுகின்ற கருணை தெய்வமே, நாங்கள் பயணிக்கும் இந்த வாழ்வில் பொருட்கள் தான் வாழ்வு என்பதை விடுத்து, சகமனிதர்களுக்கும் அவர்களது உணர்வுகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து உம் திருமகன் இயேசுவின் மதிப்பீடுகளை அவர்களோடு பகிர்ந்து வாழுகின்ற வரத்தை தருமாறு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) அரவணைத்துக் காத்துவரும் இறைவா, நோய்களின் கொடுமை தாங்க முடியாமல் பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகித் துன்புறும் மனிதர்களுக்கு நலமளித்து காத்திட வேண்டுமாய் உம்மை கெஞ்சி மன்றாடுகிறோம். உடல் நலம் குன்றி தனிமையில் வாடும் மக்களைத் தேடிச் சென்று நலம் விசாரிக்கும் நல்ல மனத்தினை எமக்குத் தந்தருள வேண்டுமென்றும் இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## திரு.வி.க.வின் கிறிஸ்துவின் அருள் வேட்டல்



**ஏசு கிறிஸ்து பெருமானே**
**எந்த உயிர்க்கும் அருள்வோனே**



இயேசுக் கிறிஸ்து என்னும் பெருமான் எல்லா உயிர்களுக்கும் அருள் செய்பவர் ஆவார்.



# ஆண்டவருடைய தோற்ற மாற்றம்

**06-08-2022**

தானி.7:9-10, 13-14,
2 பேதுரு 1:16-19, லூக்.9:28-36



**பா. சேவியர்**
பட்டாபிராம், சென்னை.

## திருப்பலி முன்னுரை

வானக தந்தை பூரிப்படைந்த அவரது அன்பார்ந்த திருமகனின் தோற்ற மாற்றத்தை தரிசித்து உளமாற்றம் அடையவும், அவருக்கு செவி சாய்க்கவும் வருகை தந்துள்ள அன்பு இறை மக்களே, உங்களை அன்புடன் வரவேற்கிறேன்.

இன்று நமது தாய்த் திருச்சபை நமதாண்டவர் இயேசுவின் உருமாற்ற விழாவினை கொண்டாடி மகிழ நம்மை அழைக்கின்றது. இயேசுவின் உருமாற்ற விழா திருமுழுக்கின் மூலம் நாம் பெற்றுக் கொண்ட விசுவாசம் உறுதிபெற நாம் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதை எடுத்துரைக்கிறது.

இறைவாக்குகளும் சட்டங்களும் இயேசுவில் நிறைவடைகின்றன என்பதற்கு அடையாளமாய் இத்திருக்காட்சியில் சட்டங்களின் பிரதிநிதியாக மோசேவும் இறைவாக்குகளின் பிரதிநிதியாக எலியாவும் தோன்றுகின்றனர்.

நம்மீது கொண்ட பேரன்பால், நம்மை மீட்டெடுக்க மனித உருவெடுத்து வந்த இயேசு இந்நிகழ்வின் மூலம் தான் விட்டு வந்துள்ள மாட்சிமை நிறைந்த நிலை என்ன என்பதை வெளிப்படுத்துகிறார்.

இயேசு உண்மையிலேயே 'கடவுளின் மகன்' என்ற சத்தியத்தை மலை உச்சியில் இருந்து சத்தம்போட்டு இத்தரணிக்குச் சொல்கிறது இத்திருநிகழ்வு. இயேசுவின் தோற்ற மாற்றம் என்பது அவரில் நம்பிக்கை கொண்டோர் தோற்றம் மாறுவதற்கு ஓர் அடித்தளமாய் அமைகிறது.

இயேசுவின் இறைத்திட்டத்தோடு நம்மை பிணைத்துக்கொள்ளும்போது நாமும் நம் வானகத்தந்தையின் பிள்ளைகளாக உரு மாற்றம் பெற முடியும் என்ற நம்பிக்கை யோடு இத்திருப்பலியில் பங்கெடுப்போம். நலம் தரும் நற்கருணையாக உருமாறி நம்மை நோக்கி வரும் நமதாண்டவரை தரிசித்து மகிழ்வோம்.

## முதல் வாசக முன்னுரை

இன்றைய முதல் வாசகத்தில் தானியேல் இரவில் தான் கண்டக் காட்சிகளைப் பற்றி விவரிக்கின்றார். தபோர் மலையில் இயேசு உருமாற்றம் அடைந்ததற்கு முன்னோட்டமாக அமையும் வகையில் காட்சிகளாக விரியும் இவ்வாசக நிகழ்வுகளை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

இன்றைய இரண்டாம் வாசகம் ஆண்டவரின் தோற்றமாற்றத்திற்குச் சாட்சியாக அமைகின்றது. இறை அனுபவம் அல்லது இறை பிரசன்னம் என்பது இருளில் ஒளிரும் ஒளிக்கும், அளவிட முடியாத மாட்சி என்னும் ஒளிக்கும் ஒப்பிடுகிறார் பேதுரு. இயேசுவில் இந்த ஒளி வெறும் உருவகமாக இல்லாமல் அது உண்மையாகவே மாறுகிறது என்பதை எடுத்துரைக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.



# திருக்குறள் வழங்கும் சமூக நெறி




சிந்தனையாளர்
அருட்சகோதரி. **ஜெஸிந்தா ஜான்சன்** FSPM


## குறள் - 4

**வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல**

### குறள் விளக்கம்

விருப்பு வெறுப்பு இல்லாத கடவுளின் திருவடிகளை பொருந்தி நினைக்கின்றவர்க்கு எப்போதும் எவ்விடத்திலும் துன்பம் இல்லை.

### சிந்தனை

விருப்பு வெறுப்பு இல்லாத மனிதர் உண்டோ? என கூறும் அளவுக்கு சில விருப்பு வெறுப்புகள் மனித வாழ்வை கட்டுபடுத்துகின்றன. விருப்பு வெறுப்பின்றி வாழ்பவர்கள் கட்டுகளை உடைத்த சுதந்திர வாழ்வு வாழ்பவர்கள். இதுவே இறைவனின் குணம். அதனை பொருந்தி வாழ வேண்டும் என்றே வள்ளுவர் கூறுகின்றார்.

அச்சுதன் மிகவும் நல்லவர். அதுவே அவருக்கு ஏமாளி, வாழத் தெரியாதவன் என்ற பெயரை பெற்றுக் கொடுத்தது. இந்த குறையை ஒரு ஞானியிடம் போய் சொன்னார். ஞானி அவருக்கு தீர்வு சொல்லும் விதமாக அவரை ஒரு அன்னசச்சாவடிக்கு அழைத்துச் சென்றார். அங்கு சாப்பிட்டுவிட்டு வெளியில் வருபவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று கேட்கச் சொன்னார். அவ்வாறு கேட்கும் போது பலர் சத்திரத்தை நடத்துபவரை பாராட்டினர். சிலர் முன்னாடி மாதிரி தரமுள்ள உணவு இப்போது இல்லை என்றனர். இன்னும் சிலர் அப்பா சொத்தை செலவு செய்யத் தெரியாமல் இந்த பையன் இவ்வாறு செலவு செய்கிறான் என்றனர். இதையெல்லாம் கேட்ட அச்சுதன் இந்த சத்திர முதலாளியும் என்னைப் போல் ஒரு ஏமாளி தான் என்றான்.

பின் சத்திர முதலாளியை நேரில் சந்தித்து, இந்த விமர்சனங்களை எப்படி எடுத்துக் கொள்கிறீர்கள்? என்னால் கேட்க முடியவில்லையே என்றார். அதற்கு சத்திரக்காரர் என் சூழ்நிலை மற்றும் பின்புலத்தை அறியாமல் பேசுபவர்களை நான் கருத்தில் கொள்வதில்லை. நல்ல காரியம் செய்ய நான் முடிவெடுத்தேன், அதன்படி செய்கிறேன். அதனால் பிறர் விமர்சனங்களை கண்டு எனக்கு விருப்பு வெறுப்பு ஏற்படவில்லை. அவர்களை நான் கருத்தில் கொள்வதில்லை என்றார்.

விருப்பு வெறுப்பின்றித் தீர்ப்பிடுங்கள். உயர்ந்தோனுக்கும் தாழ்ந்தோனுக்கும் ஒன்று போல் செவி கொடுங்கள் - இணை. 1:17 என்று கூறுகின்றது.

ஒரு மனிதன் தனிப்பட்ட வாழ்வில் எப்படி வாழ்ந்தாலும் பொது வாழ்வில் பலருக்கும் பயன்பட வாழ வேண்டுமென்றால் விருப்பு வெறுப்புகளை களைந்து தான் வாழ வேண்டும். உதாரணமாக ஒரு நீதிபதி என்றால் மக்கள் பணியில் இருக்கும் அவர் விருப்பு வெறுப்புகளை களைந்து சரியான முடிவெடுத்து மக்களுக்கு நல்ல தீர்ப்புகளை வழங்க வேண்டும்.

இன்னும் சொல்ல வேண்டுமென்றால் ஒரு திருக்குறளையே இக்குறளுக்கு மேற்கோளாக காட்ட முடியும்.

இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்ப முறுதல் இலன்

என்கிறது குறள் 628

அதாவது உடம்பிற்கு இன்பம் விரும்பாதவனாய் அதற்கு வரும் துன்பத்தை இயல்புதானே என்பவன் மனம் தளர்ந்து துன்பப்பட மாட்டான். எனவே விருப்பு வெறுப்பு கடந்து உண்மை அறிவோம்.



# வத்திக்கான் செய்திகள்

சமீபத்தில் அமெரிக்காவில் கத்தோலிக்க மக்கள் மத்தியில் சிநிவீஹி என்ற நிறுவனத்தினரால் எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பில், ஒரு குறிப்பிடத்தக்க மக்கள் இன்றைய அமெரிக்க அதிபரின் மீது அதிருப்தியாய் இருப்பதாகத் தெரிய வருகின்றது. மற்றும் அதே கருத்துக் கணிப்பில் பெரும்பாலான கத்தோலிக்கர்கள் தினமும் திருப்பலிக்கு செல்வதில்லை எனவும், ஒப்புரவு அருட்சாதனத்தைப் பயன்படுத்துவதில்லை எனவும், கத்தோலிக்க பாரம்பரியமான நம்பிக்கைக் கோட்பாடுகளை ஏற்பதில்லை எனவும் தெரிய வந்துள்ளது.

கொரியாவில் ஷியோல் நகரில் நடந்த ஒரு கூட்டத்தில் இணைய உலகில் அமைதி என்ற தலைப்பில் பேசிய நம் பாப்பரசர் அவர்கள், இன்றைய நவீன ஊடகம் முக்கியமாக இணையம் மக்களின் ஒற்றுமைக்கும், வெவ்வேறு கருத்துடைய சமூகங்களுக்கிடையே ஆரோக்கியமான கலந்துரையாடல் மூலமாக அனைவருக்குமிடையே நல்ல இணக்கமான வாழ்க்கை முறைக்கு பெரும் பங்காற்றுயுள்ளது. அதே வேளையில் பல இணைய தளங்கள் விஷத்தைக் கக்கி, மக்கள் மத்தியிலும், மதங்களுக்கிடையேயும், இனங்களுக்கு இடையேயும் பிளவையும், வன்முறையையும் தூண்டி வருகின்றன. இணைய தளங்களுக்குச் செல்வோர், அவற்றின் இயல்புகளை அறிந்து நன்மை எது? தீமை எது? என தெளிந்து தவறான தளங்களைத் தவிர்க்கக் கற்றுக் கொள்ளவேண்டும் எனவும் சமூக நல்லிணகத்திற்கு உழைக்கவும் வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார்.

நைஜீரியாவில் உள்ள கடுனா மாநிலத்தில், யாடின் காரு என்ற பங்குக் கோவிலில் நடந்த நிகழ்ச்சியின்போது இரண்டு குருக்கள் கடத்திச் செல்லப்பட்டிருக்கின்றார்கள். லோகோஸ் என்ற பத்திரிக்கை இந்த ஆண்டில் மட்டும் 18 குருக்கள் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டிருக்கின்றார்கள் என்று ஒரு புள்ளிவிபரத்தைத் தந்துள்ளது. அங்கு குருக்களுக்கு எதிராக நடைபெறும் இத்தகைய வன்முறை அகலவேண்டுமென்று ஞான ஒலி வாசகர் நாம் மன்றாடுவோம்.

மொசாம்பிக்கில் காபோ டெல்காடோ என்ற மாகாணத்தில் 2017ம் ஆண்டில் இஸ்லாமிய கிளர்ச்சி ஆரம்பித்தது. அதன் தொடர்ச்சியாக சமீபத்தில் இஸ்லாமிய அரசின் ராணுவம் கிறிஸ்தவர்கள் வாழும் ஆறு கிராமங்களைத் தாக்கி ஏராளமானவர்களின் தலையை வெட்டிக் கொன்றுள்ளார்கள். அதனால் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் அந்த மாகாணத்திலிருந்து வெளியேறி அகதிகளாக பல இடங்களில் தஞ்சம் புகுந்திருக்கின்றார்கள். அவர்களுக்காகவும மன்றாடுவோம்.

புனித.குரியாகோஸ் எலியாஸ் சாவரா அவர்கள் 1805-1871 இடைப்பட்ட காலத்தில் கேரளாவில் வாழ்ந்தவர். ஜாதியற்ற கேரளாவை உருவாக்க கல்விச் சேவையின் மூலமாக அவரின் பங்களிப்பு மிகப் பெரியது. அவரைப்பற்றிய ஒரு பாடம் அரசுக் கல்வித்திட்டத்தில் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட புத்தகங்களில் வைக்கப்பட்டிருந்தது. ஆனால், அது இப்போது அந்தப் பாடம் அகற்றப்பட்டுள்ளது, இது ஒரு திட்டமிடப்பட்ட சதி என்று கேரள மக்களிடையே ஒரு கருத்து உள்ளது.

# இந்த வார திருப்பலி வாசகக் குறிப்புகள்



## பொதுக்காலம் 18-ம் ஞாயிறு - 31.7.22

### 31.07.2022 – ஞாயிற்றுக்கிழமை
முதல் வாசகம் : சங்கத்திருஉரை ஆகமம் 1:2,2:21-23
இரண்டாம் வாசகம் : கொலோசையர் 3:1-5, 9-11
நற்செய்தி : லூக்கா 12:13-21

### 01.08.2022 – திங்கட்கிழமை
முதல் வாசகம் : எரேமியா 28:1-17
நற்செய்தி : மத்தேயு 14:13-21


### 02.08.2022 – செவ்வாய்கிழமை
முதல் வாசகம் : எரேமியா 30:1-2, 12-15, 18-22
நற்செய்தி : மத்தேயு 14:22-36

### 03.08.2022 – புதன்கிழமை
முதல் வாசகம் : எரேமியா 31:1-7
நற்செய்தி : மத்தேயு 15:21-28

### 04.08.2022 – வியாழக்கிழமை
முதல் வாசகம் : எரேமியா 31:31-34
நற்செய்தி : மத்தேயு 16:13-23

### 05.08.2022 – வெள்ளிக்கிழமை
முதல் வாசகம் : நாகூம் 1:15, 2:2, 3:1-3, 6-7
நற்செய்தி : மத்தேயு 16/24-28

### 06.08.2022 – சனிக்கிழமை
முதல் வாசகம் : தானியேல் 7:9-10, 13-14
இரண்டாம் வாசகம் : 2பேதுரு 1:16-19
நற்செய்தி : லூக்கா 9:28-36



**யார் ஒருவர்
சோதனை வரும்போது,
பக்தியோடு
சிலுவை அடையாளம்
வரைகிறார்களோ,
அவர்கள்
நரகத்திற்கு
பயங்கரத்தையும்,
மோட்சத்தில்
மகிழ்ச்சியையும்
அளிக்கிறார்கள்.**

அர்ச். ஜான் மரிய வியான்னி




# திருவிவிலியத்திலிருந்து எடுத்தாளப்பட்ட

## தித்திக்கும் திருக்குறள்

**எனைத்துணையர் ஆயினும் என்ஆம்? தினைத்துணையும்
தேரான் பிறனில் புகல்.**

அதிகாரம் 15
பிறனில் விழையாமை
குறள் - 144

**பொருள் :** தினையளவும் ஆராய்ந்து பார்க்காமல் பிறனுடைய மனைவியிடம் செல்லுதல் எவ்வளவு பெருமை உடையவராய் இருந்தாலும் என்ன பயன் ? தினை அளவு கூட தேற மாட்டான்.

அழகான பெண்ணிடமிருந்து உன் கண்களைத் திருப்பிக்கொள்; பிறன் மனைவியின் அழகை உற்றுநோக்காதே. பெண்களின் அழகால் பலர் நெறி பிறழ்ந்துள்ளனர்; இதனால் காமம் தீயெனப் பற்றியெரியும்.-சீராக்கின் ஞானம் 9:8

கடவுளாகிய ஆண்டவர் மக்களுக்கு கொடுத்த பத்துக் கட்டளைகளில் ஒன்று பிறர் மனைவியை விரும்பாது இருப்பாயாக என்பதாகும். அனைத்தையும் அறிந்தவர் நம் கடவுள். கடவுள் இந்த கட்டளையை கொடுக்கக் காரணம் அன்று ஏதோன் தோட்டத்தில் அலகை பாம்பின் வழியாக வந்து ஏவாளை மனம் மாற்றியது. ஒரு பெண் சொன்னால் ஆடவன் கேட்பான் என்று அதற்கு தெரிந்திருக்கிறது. அதனால்தான் ஆதாம் பெயர் சொல்லி அழைத்த எந்த விலங்குகள் வழியாகவும் வந்து அலகைப் பேசவில்லை; பெண்ணின் வழியாக தான் பாவத்தைக் கொண்டு வந்தது. ஏனென்றால் பெண்ணானவள் எளிதில் பிறரை நம்ப கூடியவள்; ஏமாறக்கூடியவள்; மிகவும் கடினப்பட்டு ஆதாமை மனம் மாற்றம் செய்யத் தேவையில்லை; அவள் ஒரு வார்த்தை சொன்னாலே ஆதாம் கேட்டு விடுவான் என்று அதற்கு தெரிந்திருக்கிறது.

மேலும் அதன் வார்த்தையால் இச்சை என்னும் விதையைப் பெண்ணிற்குள் போட்டது. இந்தப் பழம் பார்ப்பதற்கு எவ்வளவு அழகாக இருக்கிறது? இதைச் சாப்பிட்டால் நீங்களும் கடவுள் போல் ஆகி விடுவீர்கள் என்ற பேராசையை தூண்டிவிட்டது. பறவை எச்சம் போடுவது போல தனது வார்த்தைகளால் தீமையை ஏவாளின் உள்ளத்தில் போட்டு விட்டது.

ஆண்டவராகிய கடவுள் உருவாக்கிய காட்டு விலங்குகளிலெல்லாம் பாம்பு மிகவும் சூழ்ச்சிமிக்கதாக இருந்தது. அது பெண்ணிடம் கடவுள் உங்களிடம் தோட்டத்திலுள்ள எல்லா மரங்களிலிருந்தும் உண்ணக்கூடாது என்றது உண்மையா? என்று கேட்டது. பெண் பாம்பிடம் தோட்டத்தில் இருக்கும் மரங்களின் பழங்களை நாங்கள் உண்ணலாம். ஆனால் தோட்டத்தின் நடுவில் உள்ள மரத்தின் கனியை மட்டும் நீங்கள் உண்ணக்கூடாது; அதைத் தொடவும் கூடாது. மீறினால் நீங்கள் சாவீர்கள்; என்று கடவுள் சொன்னார் என்றாள். பாம்பு பெண்ணிடம் நீங்கள் சாகவே மாட்டீர்கள்; ஏனெனில் நீங்கள் அதிலிருந்து உண்ணும் நாளில் உங்கள் கண்கள் திறக்கப்படும். நீங்கள் கடவுளைப் போல் நன்மை தீமையை அறிவீர்கள் என்பது கடவுளுக்குத் தெரியும் என்றது.

அந்த மரம் உண்பதற்குச் சுவையானதாகவும் கண்களுக்குக் களிப்பூட்டுவதாகவும் அறிவு பெறுவதற்கு விரும்பத்தக்கதாகவும் இருந்ததைக் கண்டு பெண் அதன் பழத்தைப் பறித்து உண்டாள். அதைத் தன்னுடனிருந்த தன் கணவனுக்கும் கொடுத்தாள். அவனும் உண்டான். (தொ. நூல் 3:1-6)

ஆதாம் எத்தனையோ நாட்கள் அல்லது

மாதங்கள் அல்லது வருடங்கள் தனித்து இருந்தான். ஆண்டவர் சாப்பிடக் கூடாது என்ற அந்தக் கனியை பார்த்திருந்திருப்பான்; ஆனால் அதை ரசித்து இருந்திருக்க மாட்டான். அதைப் பற்றியே சிந்தித்தும் இருந்திருக்க மாட்டான். அது அவனுக்கு தேவைப்படாத ஒன்றாக இருந்திருந்தது.

ஆனால் ஏவாளானவள் எல்லாவற்றிலும் ஆதாமிற்கு வேறுபட்டவளாக இருந்திருக்கிறாள். அழகு என்பது அவள் கண்களில் தான் முதலில் தென்பட்டது. அக்கனி கண்களுக்கு களிப்பூட்டுவதாக இருந்தது என விவிலியத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மேலும் அறிவு பெறுவதற்கு விரும்பத்தக்கதாகவும் இருந்ததை கண்டு.... அதாவது கடவுளிடமிருந்து வரும் ஞானம் அல்ல; உலக அறிவைப் பெற விரும்பதக்கதாக இருந்து என எடுத்துக் கொள்ளலாம். அதனால்தான் ஆவதும் பெண்ணாலே; அழிவதும் பெண்ணாலே என்ற பழமொழி இன்று வரை பேசப்பட்டு வருகிறது.

அடுத்ததாக சாத்தான் பழத்தை மரத்தின் மேலெல்லாம் ஏறிப் பறித்துக் கொடுக்கவில்லை. பேச்சில் மயங்கி அவளே மரத்திலிருந்து பழத்தைப் பறித்து உண்டாள். ஏவாளுக்கு கணவனிடம் பயமோ படைத்த இறைவனிடம் இறை அச்சமோ சிறிதும் இல்லாததால் அவள் தன் கணவனுக்கு அக்கனியைக் கொடுக்கிறாள். அவனும் மறுப்பு ஏதும் சொல்லாமல் வாங்கிக் கொள்கிறான்.

பல ஆண்டுகளாக அல்லது யுகங்களாக ஆதாம் கடவுளோடு நடந்து இருப்பார். கடவுளும் அவனோடு உலா வந்து இக்கனியை நீ உண்ணக்கூடாது என்று கட்டளையாக சொன்னதும் அவனிடம் தான். ஏவாளிடம் அல்ல; உண்ணும் நாளில் நீ சாகவே சாவாய் என்று அறிவித்தும் இருந்தார். ஏனெனில் ஆண்டவர் பார்வைக்கு ஒருநாள் ஆயிரம் வருடங்கள் என தாவீது தம் பாடலில் கூறுகிறார். (திருப்பாடல் 90:4)

அப்படி என்றால் ஆதாமின் வாழ்நாட்கள் மொத்தம் 912 ஆண்டுகள். ஆயிரம் ஆண்டுகள் ஆதாம் நிறைவு செய்யவே இல்லை.

ஒரு தூதரை போலவே ஆதாம் ஆண்டவரோடு முகமுகமாக பேசி நடந்து அவரைப்பற்றி நன்கு அறிந்திருந்தும் ஏனோ அவளிடம் ஏன் இப்படி செய்தாய்? ஏன் என்னை விட்டு தனியே சென்று பாம்பிடம் பேசினாய்? கடவுள் சொன்ன கட்டளையை மீறி விட்டாயே? ஆண்டவருக்குக் கீழ்ப்படியாமல் பழத்தை பறித்து வந்து இருக்கிறாயே?

என்னை விட்டு ஏன் தனியே சென்றாய்? என்னுடன் அல்லவா நீ இருந்திருக்கவேண்டும்? மரத்தின் உயரத்தில் இருந்த பழத்தை எவ்வாறு பறித்தாய்? இந்த தைரியம் உனக்கு எப்படி வந்தது? கடவுளைப் பற்றிய பயம் உனக்கு இல்லையா? நான் இந்தக் கனி வேண்டாம் என உன்னிடம் சொன்னதும் நினைவில்லையா? எனக்கும் நீ கீழ்படியவில்லை . எனவே பழமும் வேண்டாம்; நீயும் வேண்டாம். ஆண்டவருக்கு நான் கீழ்படிந்து இருக்கிறேன். ஒருவேளை உன்னோடு சேர்ந்து இப்பழத்தை நானும் உண்டால் நம்மைப் படைத்த ஆண்டவர் நம் கீழ்படியாமையை எண்ணி மனம் வருந்துவார் என்று அதிகாரத்தோடு அவள் தவற்றைச் சுட்டிக்காட்டி இருக்கலாம். ஆனால் ஆதாம் எதுவுமே கூறாமல் உண்டதுதான் வியப்பாக இருக்கிறது.

ஏவாளைப் பார்த்ததும் கடவுளையே மறந்து போனான் ஆதாம். பெண்ணாசையால் மனிதர்கள் எல்லாவற்றையும் ஏன் படைத்த என்னையும் மறந்து விடுவார்கள் என்று அறிந்து கடவுள் சீராக்கின் ஞானநூல் 9ஆம் அதிகாரத்தில் ஒன்பதாம் இறைவசனத்தில் இவ்வாறு கூறுகின்றார்.

அடுத்தவருடைய மனைவியுடன் அமர்ந்து விருந்துண்ணாதே; அவளுடன் மது அருந்திக் களிக்காதே; உன் மனம் அவளிடம் மயங்கிவிடும்; முடிவில் உன் வாழ்வே வீழ்ச்சியுறும். – (சீரா. ஞா. 9:9)

எத்துணை சிறந்த மனைவியரை கணவன்மார் பெற்றிருந்தாலும் மற்ற பெண்களை மிகச் சிறந்தவர்களாக தான் எண்ணுவார்கள். இக்கரைக்கு அக்கரை பச்சை என்பது போல. எவரும் தன்னிறைவு பெறுவதில்லை. தங்கள் வாயின் வார்த்தைகளால் தங்கள் உறவை புகழ்ந்து கொள்ளலாம். ஆனால் உள்ளத்தில் இருப்பதை கடவுளே அறிவார் என்பதை வசனம் நமக்கு தெளிவுபடுத்துகிறது.

ஒரு பெண் எந்த ஆணையும் கணவனாக ஏற்றுக்கொள்வாள்; ஆனால் ஆணுக்கு ஒரு பெண்ணைவிட மற்றொருத்தி மேம்பட்டவளாகத் தோன்றுவாள். – (சீரா. ஞா. 36:21

இப்படிப்பட்டவர்களால் திணை அளவுக்கு கூட தங்கள் வாழ்வில் உயர்வு இருக்காது. ஆனால் இறைவனைப் பற்றிக் கொண்டவர்களால் மட்டுமே போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து என்று எண்ணி வாழ்ந்து செழித்திருப்பார்கள்.

நாம் எவ்வாறு கடவுளுக்குள் நிலைத்திருக்கிறோம் என்பதை சிந்திப்போம்.

*இயேசுவுக்கே புகழ்*

**–லீமா விக்டோரியா**